



# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் : 42**

**அறிவிப்புகள்**

**2022 – 2023**

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மானியக் கோரிக்கை எண் : 42

# அறிவிப்புகள்
## 2022 - 2023

**கே.ஆர். பெரியகருப்பன்**

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 28 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**கே.ஆர். பெரியகருப்பன்**

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

**1. குக்கிராமங்களைப், பள்ளிகள், மருத்துவ மனைகள் மற்றும் சந்தைகளுடன் இணைப்பதற்காகச் சாலை மேம்பாட்டுப் பணிகள் 1346 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

விவசாயிகள், விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும், குக்கிராமங்களில் இருந்து பள்ளிகள் மற்றும் மருத்துவ மனைகளைச் சென்றடையவும், 2,750 கி.மீ நீளத்திற்கான ஓரடுக்குக் கப்பிச்சாலைகள், 800 கி.மீ நீளத்திற்கான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் 800 கி.மீ நீளத்திற்கு பேவர்பிளாக் (Paver Block) சாலைகள் ஆகியவை 1346 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் ஊரகச் சாலைகளை வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றதாக தரம் உயர்த்த 1200 கி.மீ சாலைகள் மற்றும் 136 பாலங்கள் 874 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் ஊரகச் சாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், பள்ளிகள், கல்லூரிகள், ஊரகச் சந்தைகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசியத் தேவைகளை இணைக்கும் வகையில் 1200 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் மற்றும் 136 புதிய பாலங்கள் 874 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 3. எழில்மிகு கிராமங்களை உருவாக்க சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகள் 431.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

ஊரகப் பகுதிகளில் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்து, சுற்றுச் சூழலைப் பாதுகாக்க 350 கி.மீ. நீளத்திற்கு வடிகால் வசதி, 25,500 சமுதாய உறிஞ்சு குழிகள் மற்றும் 1.75 இலட்சம் தனிநபர் உறிஞ்சு குழிகள் ஒன்றிய மாநில நிதிப் பங்களிப்புடன் 431 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 4. ஊரகப் பகுதிகளில் 1261 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12.5 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்

ஜல் ஜீவன் திட்டம் மற்றும் 15வது நிதிக்குழு நிதியை ஒருங்கிணைத்து 1261 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 37 மாவட்டங்களில் 21,728 குக்கிராமங்களில் உள்ள 12.5 இலட்சம் ஊரக வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

## 5. நீர் மற்றும் நிலவள மேலாண்மைப் பணிகள் 683.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

நீர் மற்றும் நிலவளத்தை மேம்படுத்தி, மழை நீரின் ஒவ்வொரு துளியையும் சேமித்து, மண் அரிப்பைத் தடுத்து, மண்ணின் ஈரப்பதத்தைக் காத்து, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திடவும், விவசாயத்திற்கான பாசன வசதியை மேம்படுத்திடவும் 10,000 தடுப்பணைகள், 5,000 பண்ணைக் குட்டைகள், தனிநபர் நிலங்களில் மண்வரப்பு மற்றும் கல்வரப்பு அமைத்தல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய மாநில நிதிப் பங்களிப்புடன் 683 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

6. கிராம ஊராட்சிகளில் மின் ஆளுமையைச் (e-Governance) செயல்படுத்திட அலுவலர் களுக்கும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி வழங்குவதுடன் புதிய கணினி, அச்சிடும் இயந்திரம் மற்றும் இணைய வசதி ஏற்படுத்தப்படும்.

கிராம ஊராட்சிகளின் பல்வேறு சேவைகள் மற்றும் உரிமங்களை பெறுவதற்கு நேரடியாக ஊராட்சிகளை அணுக வேண்டியுள்ளது. மின் ஆளுமை சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் அனைத்து சேவைகளையும் இணையவழி மூலம் பெற முடியும். அதன் முதற்கட்டமாக ஊராட்சித் தலைவர் மற்றும் செயலர் ஆகியோருக்கு கணினி மற்று இணையதளப் பயன்பாட்டுப் பயி வழங்கப்பட்ட பின் கிராம ஊராட்சிகளு படிப்படியாக கணினி, அச்சு இயந்திரங்க மற்றும் இணைய வசதி 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 7. ஊராட்சிகளின் அனைத்துச் சேவைகளும் இணையதளம் மூலம் வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில், பொதுமக்கள் மனைப்பிரிவுகளுக்கான அனுமதி, கட்டட அனுமதி, தொழிற்சாலைகள் தொடங்க மற்றும் தொழில் நடத்தத் தேவையான அனுமதிகளை எளிதில் பெற (Ease of Doing Business), ஒற்றைச் சாளர முறையில் இணையதளம் மூலம் வழங்கப்படும்.

## 8. கிராம ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் கட்டணங்கள் இணையவழி மூலம் செலுத்தும் வசதி உருவாக்கப்படும்.

கிராம ஊராட்சிகளுக்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய வீட்டுவரி, தொழில்வரி, குடிநீர்க் கட்டணம், விளம்பர வரி, உரிமக்கட்டணம் போன்றவற்றை தற்போது ஊராட்சி அலுவலகங்களுக்கு நேரில் சென்றோ, ஊராட்சி செயலர் மூலமோ செலுத்த வேண்டியுள்ளது. இச்சேவைகள் அனைத்தும் இணைய வழியில் பெறும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## 9. கிராம ஊராட்சியின் மின் நுகர்வு மற்றும் குடிநீர்க் கட்டணம் இணையவழி மூலம் செலுத்தும் முறை உருவாக்கப்படும்.

கிராம ஊராட்சிகள், தங்களது மின் மற்றும் குடிநீர்ப் பயன்பாட்டுக் கட்டணத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உடனுக்குடன் இணைய வழியில் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

10. தமிழகத்தின் மாநில மரமான பனைமரப் பரப்பை அதிகரிக்கவும், பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லவும், 381.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 இலட்சம் பனை விதைகள் மற்றும் 69 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஊரகப் பகுதிகளை பசுமையாக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், ஊராட்சி மற்றும் அரசு நிலங்கள், அரசு நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பொதுப் பூங்காக்கள் மற்றும் ஊரகச் சாலைகளின் இரு மருங்கிலும் 69 இலட்சம் மரக்கன்றுகள் 293 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்படும்.

மழை மற்றும் வெள்ளக் காலங்களில் ஏரிகள் மற்றும் வாய்க்கால்களின் வரப்பினைப் பாதுகாக்கவும், ஊரகப் பகுதிகளில் பனைப் பொருட்கள் சார்ந்த வேலை வாய்ப்பினை பெருக்கவும், 25 இலட்சம் பனை விதைகள் 87 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊன்றப்படும்.

**11. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட, வேளாண் நிலங்களில் 8.45 இலட்சம் பழ மரக்கன்றுகள் 11 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்படும்.**

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில், சிறு/ குறு மற்றும் பட்டியலின/ பழங்குடியின விவசாயிகளின் நிலத்தின் ஒரு பகுதியில் நாவல், மாதுளை, மா, பலா, சப்போட்டா, எலுமிச்சை போன்ற மரக்கன்றுகள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 20 விவசாயிகள் என்ற வீதத்தில் நில மேம்பாட்டுப் பணிகளோடு இணைந்து, மரக்கன்றுகள் நடும் பணி, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, 8.45 இலட்சம் பழ மரக்கன்றுகள், 11 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**12. பசுமையான தமிழகத்தை உருவாக்க, மகளிர் குழுக்களின் கூட்டமைப்புகளை ஈடுபடுத்தி, புதிய நாற்றங்கால்கள் 92.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மகளிர் பங்களிப்பினை உயர்த்தவும், சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் புதிதாக 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3,500 முருங்கை நாற்றங்கால்கள் மற்றும் 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஒன்றிய மாநில நிதிப் பங்களிப்புடன் 92 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

## 13. இரும்புச்சத்துக் குறைபாடில்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முருங்கை மரக் கன்றுகள் வழங்கப்படும்.

இரும்புச்சத்துக் குறைபாடில்லா தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் 3,500 புதிய முருங்கை நாற்றங்கால்களில் 21 இலட்சம் முருங்கை நாற்றுகள் வளர்க்கப்பட்டு, 10.50 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு தலா இரண்டு மரக்கன்றுகள் வீதம் வழங்கப்படும். இவற்றை மகளிர் தமது இல்லங்களில் நட்டுப் பயன்பெறுவர்.

## 14. கிராமப்புரக் குழந்தைகளுக்காக 500 அங்கன்வாடி மையங்கள் 59.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

ஊட்டச்சத்து மிக்க சமுதாயத்தை உருவாக்கும் விதமாக ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் சமூக நலத்துறையுடன் ஒருங்கிணைந்து 500 குழந்தை நேய அங்கன்வாடி மையங்கள் 59 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இக்கட்டடங்கள் கட்டுவதில் பழங்குடியினர் அதிகளவில் வசிக்கும் குக்கிராமங்கள் / கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 15. 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் ஊரக மக்களுக்கான பல்வேறு சேவைகளை வழங்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது. இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 16. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணிமேற்பார்வையாளர்களின் (Overseer) நேரடி நியமனம் மேற்கொள்ளப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டப் பணிகளைச் செயல்படுத்தும் முன்களப் பணியாளர்களான பணிமேற்பார்வையாளர்கள் பணியிடம் பல மாவட்டங்களில் காலியாக உள்ளன. இப்பணியிடங்களுக்கு மாவட்ட அளவில் நேரடி நியமனத்தைத் தவிர்த்து, இனிவருங் காலங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மேற்கொள்ளப்படும்.

## 17. ஊரகப் பகுதிகளில் சமூகப் பொறுப்புடன் செயல்படும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்படும்

தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் சமூகப் பொறுப்புணர்வுடன், பாராட்டத்தக்க வகையில், சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து, சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும், மாவட்டத்திற்கு ஒரு விருது வீதம் 37 மாவட்டங்களிலும் சிறப்பாகப் பணிசெய்த, தலைசிறந்த தொழில் மற்றும் வணிக நிறுவனத்திற்கு விருது வழங்கப்படும். இந்த விருது, ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் கொண்ட தாகும்.

**18. சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விதமாக அனைத்து சமூகத்தினரும் பயன் பெறத்தக்க வகையில் முன்மாதிரியாக 10 எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.**

சமூக ஒற்றுமையை நிலைநாட்டும் விதமாக அனைத்துச் சமூகத்தினரும் பயன்படுத்தும் வகையில், 10 எரிவாயு தகன மேடைகள் 17.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 19. நிலமற்ற ஏழைப் பயனாளிகளுக்கு அரசு புறம்போக்கு நிலத்தில் 14.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஊரகப் பகுதிகளில் முதன் முறையாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனப்பரப்பும், நன்செய் நிலங்களும், மக்கள் தொகையும் அதிகமாக உள்ளதால் நிலமற்றோருக்கு பட்டா வழங்கத் தேவையான தரிசு நிலம் பற்றாக்குறையாக உள்ளது. எனவே நிலமற்ற 2,508 குடும்பங்களுக்கு அரசுத் திட்டங்களில் வீடு கட்ட, வீட்டு மனைப்பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு, தோவாளை ஊராட்சி ஒன்றியம், ஞாலம் ஊராட்சியில், நிலமற்ற 192 பயனாளி களுக்கு, ஊரகப் பகுதிகளில் முன் மாதிரியாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் 14.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

## 20. வெளிப்படையான நிர்வாகத்தை உறுதி செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்ககத்தில் மக்கள் குறைதீர் மையம் அமைக்கப்படும்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்கள் தொடர்பான குறைகளைத் தொலைபேசி, கைபேசி செயலி மற்றும் 'வாட்ஸ் ஆப்' மூலம் எழுப்பப்படும் சந்தேகங்களுக்கு பதிலளித்து குறை நிவர்த்தி செய்து வெளிப்படையான நிர்வாகத்தை உறுதி செய்ய மாநில அளவிலான மக்கள் குறைதீர் மையம் அமைக்கப்படும்.

## 21. பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் திட்ட மேலாண்மை அலகுகள் ஏற்படுத்தப்படும்

"அனைவருக்கும் வீடு" என்ற நோக்கத்துடன், வீடற்ற ஏழைகளுக்கு வீடு வழங்க, ஒன்றிய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் மொத்தம் 4,64,637 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட பணிகளை விரைந்து செயல்படுத்திட, திட்ட மேலாண்மை அலகுகள் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் ஏற்படுத்தப்படும். இந்தப்பணி வெளிச்சந்தை (Outsourcing) முறையில் செயல்படுத்தப்படும்.

**22. ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கும் தேசிய அளவில், தலைசிறந்த நிறுவனங் களில் தலைமைத்துவம் மற்றும் மேலாண்மைப் பயிற்சிகள் 3.8 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

நீடித்த நிலையான வளர்ச்சிக் குறிக் கோள்களை கிராம அளவில் அடைந்திட, ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும் அலுவலர்களுக்கும் தலைமைத்துவம் மற்றும் மேலாண்மைப் பயிற்சிகள், தேசிய அளவில் IIT, IIM, IRMA போன்ற தலை சிறந்த நிறுவனங்களில் 3.8 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். உள்ளாட்சியில் அதிக அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெண் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்குச் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும்.

## 23. 25,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களுக்கு 30 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.

சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் மற்றும் நலிவடைந்தோரை ஒருங்கிணைத்து ஊரகப் பகுதிகளில் 10,000 புதிய சுயஉதவிக் குழுக்களும், நகரப் பகுதிகளில் 15,000 புதிய சுயஉதவிக் குழுக்களும் உருவாக்கப்படும். குழுக்களில் இணைவதன் மூலம் உறுப்பினர்கள் அரசு சலுகைகள் பெறுவதற்கு வழிவகை ஏற்படும்.

உருவாக்கப்படும் புதிய குழுக்களுக்கு சுழல் நிதியாக 30 கோடி ரூபாய் வழங்கப்படும். இந்நிதியானது குழு உறுப்பினர்கள் அதிகளவில் வங்கிக் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யும்.

## 24. ஊரகப் பகுதிகளில் உள்ள 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு 225 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் விரிவுபடுத்துவதற்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம், குழு ஒன்றிற்கு 1.50 இலட்சம் ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

## 25. சுய உதவிக்குழுக்களுக்கு 25,000 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு, ஏழை மகளிர் தொழில் துவங்க மற்றும் விரிவுபடுத்துவதற்கான நிதித் தேவைகளை பூர்த்தி செய்கிறது. இதன் மூலம் அவர்களின் வருமானம் பெருகி வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது. ஏழைக் குடும்பங்களின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, கிராமப்புர மற்றும் நகர்ப்புர சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்புத் திட்டத்தின் மூலம் இவ்வாண்டு 25,000 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும்.

## 26. மாவட்டங்களில் உள்ள பூமாலை வணிக வளாகங்கள் 5.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதுப்பிக்கப்படும்

மாநிலம் முழுவதும் உள்ள சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் பூமாலை வணிக வளாகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வளாகங்கள் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் அமைந்துள்ளன. சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் பல வளாகங்கள் சேதமடைந்துள்ளன.

சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், சந்தைவாய்ப்பினை அதிகரிக்கச் செய்யவும் இப்பூமாலை வணிக வளாகங்கள் 5.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

புதுப்பித்த பூமாலை வணிக வளாகங்கள், சுய உதவிக்குழு மகளிர் சந்தைகள் நடத்தும் வகையில் வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்படும்.

## 27. 45,000 இளைஞர்களுக்கு 170 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கப்படும்.

தமிழகத்தின் கிராமப்புரங்களைச் சார்ந்த படித்த 25,000 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற ஏதுவாக வேலைவாய்ப்புடன் இணைந்த திறன் பயிற்சிகள் 150 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். மேலும், சுய தொழில் தொடங்குவதற்கான பயிற்சிகள் 20,000 இளைஞர்களுக்கு 20 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 28. 388 வட்டாரங்களில் 'இளைஞர் திறன் திருவிழா' 1.94 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக திறன் பயிற்சியளிக்கும் அரசுத் துறைகளையும், தனியார் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, 388 வட்டாரங்களில் 'இளைஞர் திறன் திருவிழாக்கள்' நடத்தப்படும். இளைஞர்கள் அதிக வேலை வாய்ப்புள்ள தொழில்களைப் பற்றி அறிந்து கொள்வதோடு, திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் தகவல்களையும் ஒருங்கே பெறுவதற்கு, இந்தத் திறன் திருவிழாக்கள் பேருதவியாக அமையும். இதற்காக 1.94 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.